# IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF SULUR
## (DEPOSITION OF WITNESS

**நீ.ம.சா.1-)**

அசல் வழக்கு எண். 126/2019

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோபாலகிருஷ்ணன் | தாலூக்கா | சூலூர் |
| தந்தை பெயர் | ஈஸ்வரன் | கிராமம் | சூலூர் |
| பணி | நீதிமன்ற ஆணையர் | மதம் | |
| வயது | | | |

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 22.09.2025 is accordance with the provision of Act X of 3331

**முதல் விசாரணை**

**1.** நான் இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் ஆவேன். நான் இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்பட்டு வழக்கு சொத்தை பார்வையிட்டு அறிக்கை, வரைபடம் மற்றும் சர்வேயரின் வரைபடம் (2 எண்ணிக்கைகள்), சர்வேயரின் அறிக்கை, புகைப்படம் மற்றும் அதற்குண்டான ரசீது, நில அளவையின் போது பதிவு செய்யப்பட்ட வீடியோக்களை பென்டிரைவ் மூலமாக தாக்கல் செய்கிறேன். **நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ.1, வரைபடம் நீ.ம.சா.ஆ.2, சர்வேயர் வரைபடம் (2 எண்ணிக்கைகள்) மற்றும் அறிக்கை நீ.ம.சா.ஆ.3. புகைப்படம் மற்றும் ரசீது நீ.ம.சா.ஆ.4, பென்டிரைவ் மற்றும் அதற்கான ரசீது நீ.ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. 11.02.2023 ம் தேதி வழக்கு சொத்தை முதல் முறையாக அளவீடு செய்ய சென்றேன், அப்போது DGPS மூலமாக அளவீடு செய்ய வேண்டும் என இரு தரப்பு வழக்கறிஞர்கள் மற்றும் சர்வேயர் சொன்னார், அதனால் அன்றைய தேதியில் அளவீடு செய்ய இயலவில்லை. மீண்டும் 15.07.2023 அன்று வழக்கு சொத்தை மீண்டும் பார்வையிட்டு வழக்கு சொத்தை முழுவதுமாக அளவீடு செய்தோம். வழக்கு சொத்தின் மேற்கு எல்லையின் காலை எண்.156 ஆகும்.

2. புல எண்.153 க்கு வடபுறமாக காலை எண்.152 உள்ளது. புல எண்.153, 156, 152 ஆகிய காலைகள் சந்திக்கும் இடத்தில் எல்லைக்கல் நடப்பட்டு இருந்ததா என்றால் இல்லை. மேற்படி எல்லைக்கல் குறித்து சர்வேயரிடம் நான் கேட்டேனா என்றால் மற்றவை தெரிந்ததால் அதை கேட்கவில்லை. மற்ற கற்களை வைத்து அளந்தபோது புல எண்.153, 156, 152 ஆகிய காலைகள் சந்திக்கும் இடத்தை கண்டுபிடித்தோமா என்றால் மற்ற காலைகள் இருந்ததால் அது தேவைப்படவில்லை. புல எண்.153, 156, 152 ஆகிய காலைகள் சந்திக்கும் இடத்தை சர்வேயர் காட்டினார் என்றால் அது தவறு.

3. புல எண்.153, 156, 152 ஆகிய காலைகள் சந்திக்கும் இடத்தை தேசிய நெடுஞ்சாலையில் இருந்து சர்வீஸ் ரோட்டில் சர்வேயர் அடையாளப்படுத்தி காட்டினார் என்றால் தவறு, மற்றும் சர்வேயர் கொடுத்த வரைபடத்தில் அதை அடையாளப்படுத்தி காட்டவில்லை. நில அமைப்பு சர்வேயர் வரைபடத்தில் வராது என்றால் நில அளவைக்கற்கள் அவரது வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. மனுதாரர் பூமியை யார் எனக்கு அடையாளப்படுத்தினார்கள் என்றால் மனுதாரரும் அவரது வழக்கறிஞரும் அடையாளப்படுத்தினார்கள் அப்போது எதிர்மனுதாரரின் வழக்கறிஞரும் உடன் இருந்தார். நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல, அனைத்தும் புகைப்படம் மற்றும் வீடியோக்களாக பதிவு செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. மனுதாரரும் அவரது வழக்கறிஞரும் அடையாளம் காட்டிய பூமியின் செக்குபந்தியை சொல்ல முடியும். அதன் செக்குபந்தி கிழமேல் தேசிய நெடுஞ்சாலைக்கும் தெற்கு, 156 ம் நம்பர் காலைக்கும் கிழக்கு, 3 ம் நபர் இடத்திற்கும் வடக்கு, 5 K Training Centre க்கும் மேற்கு, நான் சொல்லியுள்ள செக்குபந்தி தவறானது என்றால் சரியல்ல. பிரதிவாதி பூமிக்கு மேற்கு வழக்கு சொத்து உள்ளது என்றால் 4 ம் எதிர்மனுதாரர் பூமிக்கும் மேற்கு, வழக்கு சொத்தை நான் பார்வையிடவில்லை என்றும், அதனால் தான் நான் முன்னுக்குப் பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு, நான் மனுச்சொத்தை பார்வையிடும்போது அனைத்தும் புகைப்படம் மற்றும் வீடியோவாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

5. 156 ம் நம்பர் காலைக்கும், மனுதாரர் சொத்திற்கும் இடையே இடைவெளி உள்ளதா என்றும், அதன் உரிமையாளர் யார் என்று விசாரணை செய்தேனா என்றால் இடைவெளி இல்லை, 156 ம் நம்பர் காலையில் தென்வடலாக கம்பிவேலி போடப்பட்டுள்ளது. எனது நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் மனுதாரர் பூமியை ஒட்டி மேல்புறம், 0.04 ஏக்கர் பூமியில் முக்கோண வடிவில் க.ச.எண்.156 ல் இருந்தது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி க.ச.எண்.156 ல் உள்ள முக்கோண வடிவில் உள்ள பூமி யாருடையது என தெரிந்துகொண்டேனா என்றால் வாரண்டில் அது குறித்து சொல்லாததால் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை.

6. எதிர்மனுதாரர்கள், க.ச.எண்.153 ன் காலையில் மேல்புற எல்லை, 156 காலை அதில் கம்பிவேலி அமைக்கப்பட்டுள்ளது என்றும், அதுவரை 153 காலை அமைந்துள்ளது என்றும், 156 காலை வரை மனுதாரரின் சொத்து அமைந்துள்ளது என எதிர்மனுதாரர்கள் என்னிடம், நான் வழக்கு சொத்தை அளவீடு செய்தபோது என்னிடம் சொன்னார்கள் என்றால் அது சம்பந்தமாக எவ்விதமான எழுத்துபூர்வமான குறிப்பாணையும் என்னிடம் கொடுக்கவில்லை, அது மட்டுமின்றி நில அளவையர் அவருடைய வரைபடத்திலும் மேற்கண்டவாறு குறிப்பிடவில்லை.

7. நில அளவையர் வரைபடத்தை பரிசோதனை செய்து பார்த்தேனா என்றால் ஆமாம். நில அளவையர் வரைபடம் படிக்க முடியாத நிலையில் உள்ளது என்றால் தவறு, மற்றும் நான் அதில் உள்ள அளவுகளை வைத்து தான் எனது அறிக்கை மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். 4 செண்ட் பூமியின் தென்வடல் அளவு என்ன என்றால் அந்த அளவுகள் நில அளவையர் கொடுத்த வரைபடத்தில் 159.8 மீ ஆகும். நில அளவையர் 4 செண்ட் நிலத்தை தனியாக காட்டியுள்ளார் என்றால் சரிதான். முன்னதாக வரைபடத்தில் குறிப்பிட்டு காட்டவில்லை என்றுசொல்லியுள்ளேன் என்றும், தற்போது நான் வரைபடத்தை காட்டி அடையாளம் காட்டியுள்ளேன் என்றும், நான் ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்யவில்லை என்றால் நான் எனது மாதிரி வரைபடத்தில் ஆக்கிரமிப்பு பகுதியை குறிப்பிட்டு காட்டியுள்ளேன், எனது ஆணையர் அறிக்கை தவறானது என்றால் சரியல்ல.

8. புல எண்.153 நம்பர் காலைக்கு தென்புறமாக 155 மற்றும் 154 காலை

உள்ளது. புல எண்.153, 156, 155 ஆகிய மூன்று காலைகளும் மனுதாரரின் தென்புற எல்லையில் சந்திக்கிறது என்றால் இல்லை. மனுதாரரின் தென்புற பூமியை ஒட்டி மேலும் மனுதாரருக்கு பூமி உள்ளதாக சொன்னாரா என்றால் எழுத்துபூர்வமாக குறிப்பாணை எதுவும் கொடுக்கவில்லை. எதிர்மனுதாரர்கள் மேற்படி எல்லைக்கல்லை அடையாள காட்ட சொல்லி என்னிடமும், சர்வேயரிடமும் சொன்னார்கள் என்றால் ஏற்கனவே போதுமான எல்லைக்கல் 153 காலையில் இருந்ததாலும், மேற்படி இவர்கள் அளவை உறுதி செய்ய 177 ல் உள்ள அளவுக்கற்களை வைத்து மேற்படி வரைபடம் தயார் செய்யப்பட்டது.

9. நான் முன்னதாக புல எண்.153 காலையில் கல் இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் தவறு. புல எண்.153, 156, 170, 171 ஆகிய காலைகளில் நில அளவைக் கற்கள் எதுவும் இல்லை என்று சர்வேயர் அவரது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நான் யூகம் மற்றும் அனுமானத்தின் அடிப்படையில் தான் சொத்துக்களை அளவீடு செய்துள்ளேன் என்றால் தவறு. மனுச்சொத்தின் கிழக்கு எல்லையை மனுதாரர் அடையாளம் காட்டினாரா என்றால் இல்லை, நில அளவையர் அடையாளம் காட்டினார்.

10. மனுதாரர் சொத்தை அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான். மனுதாரருக்கு சொத்தின் கிழக்கு எல்லை பற்றிய விவரம், தெரியாது. என்றால் எனக்கு தெரியாது, அது மனுதாரரிடம் விசாரிக்க வேண்டும். சர்வேயரும், நானும் சொத்தின் கிழக்கு எல்லை பற்றிய விவரம் தெரியாமல் அளந்துள்ளோம் என்றால் சரியல்ல. வரைபடத்தில் மனுதாரரின் இடத்தில் கட்டிடமோ, தென்னை மரங்கள் இல்லை என்றால் சரிதான். நான் எனது அறிக்கையில் பத்தி 3 ல், எதிர்மனுதாரர் சின்னம்மாளின் பூமியில் வடபுறம் 6.1 மீ , தென்புறம் 5.9 மீ அளவில் மனுதாரருக்கு பாத்தியப்படும் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆணையர் கொடுத்த வரைபடத்தை ஒத்து நான் எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். மனுசொத்து காலியிடம் ஆகும்.

11. வரைபடத்தில் 4 ம் எதிர்மனுதாரரின் சொத்தில் வடபுறம் 6.1 மீ , தென்புறம்

5.9 மீ அளவு பூமியில் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் குறித்து குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஆமாம், அதற்குண்டான வீடியோ ஆதாரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அதில் எத்தனை தென்னை மரங்கள் உள்ளது என்பது பற்றி குறிப்பிட்டுள்ளேனா என்றால் எண்ணிக்கைகளை குறிப்பிடவில்லை. மரங்களின் வயதை குறிப்பிடவில்லை, சிறியது என குறிப்பிட்டுள்ளேன்.

12. தென்னை மரங்களின் வயது எவ்வளவு இருக்கும் என்றால் வயதை தீர்மானிக்கும் நிபுணர் இல்லை. மனுதாரருக்கும் , எதிர்மனுதாரர் சின்னம்மாள் பூமிக்கும் இடையே கம்பிவேலி இருந்தது. கம்பிவேலிக்கும், தென்னை மரங்களுக்கும் இடையே எத்தனை அடி இடைவெளி இருந்தது என்றால் வடபுறம் 6.1 மீ ஆகவும், தென்வடல் 5.9 மீ ஆகவும் இருந்தது. மேற்கண்ட அளவுகள் தவறானது என்றால் சரியல்ல. எனது அறிக்கை தவறானது என்றால் சரியல்ல. தென்னை மரங்களுக்கு வடபுறமாக பழைய தோட்டத்து சாளை இருந்தது என்றால் ஒரு ஷெட் இருந்தது. தென்னை மரங்களை தாண்டி கிழபுறமாக இருந்தது.

13. நான் சொல்வது தவறு என்றும், கம்பிவேலியை ஒட்டி 1.5 மீ தூரத்தில் தோட்டத்து சாளை இருந்தது என்றால் தென்னை மரங்களை தாண்டி தான் இருந்தது. தோட்டத்து சாளையை ஒட்டி வடபுறமாக கடைகள் உள்ளது என்றால் சரிதான். தோட்டத்து சாளை, வீடு, தென்னை மரம் 4ம் எதிர்மனுதாரரின் பூமியை ஒட்டி உள்ளது என்றால் சரிதான். நான் மனுச்சொத்தை தாண்டி அளந்துள்ளேன் என்றால் சரியல்ல. மனுச்சொத்திலேயே கட்டிடம் குறிப்பிடவில்லை என்றும், நானும் சர்வேயரும் சேர்ந்து தவறுதலாக எதிர்மனுதாரருக்கு இழப்பு ஏற்படுத்தவே தவறாக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

14. மனுதாரரின் சொத்தில் வடக்கு எல்லை பூமியில் 4 செண்ட், தெற்கு எல்லையில் 15 செண்ட், ஆகியவற்றை வேண்டுமென்றே அளக்கவில்லை என்றும், அதை எதிர்மனுதாரர்கள் சுட்டிக்காட்டினார்கள் என்றும், மேற்படி சொத்துக்கள் மனுதாரரின் அனுபவத்தில் உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>1மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. பிரதிவாதி ஆவணங்களின் படி தான் சொத்துக்களை அளந்தேன் என்றால் சரிதான். தேசிய நெடுஞ்சாலைக்காக எடுக்கப்பட்ட 8.5 செண்ட் பூமி நீங்கலாக, மீதமுள்ள ஏக்கர் 2.28 ½ பூமியை அளக்க சொல்லி உத்தரவிடப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தை மனுதாரர், எதிர்மனுதாரர் மற்றும் அவர்களது வழக்கறிஞரின் முன்னிலையில் சொத்துக்களை அளந்தேன் என்றால் சரிதான். ஏற்கனவே ஒரு முறை சொத்தை அளக்க சென்று விட்டு மீண்டும் ஒருமுறை சொத்தை அளந்தோம் என்றால் சரிதான்.

2. நில அளவையர் அவரது அறிக்கையில் வடபுறம் 6.1 மீ கிழமேலாகவும், தென்புறம் 5.9 மீ கிழமேலாகவும் மொத்தம் 23 செண்ட் பூமியானது ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக அறிக்கையில் சொல்லியுள்ளார் என்றால் மனுதாரரின் ஆவணத்தின்படி என்று வரைபடம் தாக்கல் செய்துள்ளார். வரைபடத்தில் மஞ்சள் நிறத்தில் காட்டப்பட்டுள்ளது தான் ஆக்கிரமிப்பு பகுதி என்றால் சரிதான். நில அளவையர் முக்கோண வடிவில் உள்ள பூமி 156 நம்பர் காலைக்கு உரியது என சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அதை இரண்டு முறை அளவீடு செய்தபோதும் உறுதி செய்து கொண்டோம்.

3. 1ம் வாதி பூமியின் அருகில் தென்கிழக்கு மூலையில் எல்லைக்கல் இருந்ததாக நில அளவையர் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். காலை எண்.153 க்கும் மற்றும் 154, 155 க்கும் இடையே நில அளவை கற்கள் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். ஆக்கிரமிப்பு பகுதியில் தென்னை மரம் வைக்கப்பட்டும், வடபுறம் ஒரு பாத்ரூம் உள்ளது என்றால் சரிதான். காலை எண்.177 ல் உள்ள நில அளவை கற்களை வைத்து தான் நில அளவை பணி முடித்து வரைபடம் தாக்கல் செய்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

4. காலை எண்.177 ல் உள்ள நில அளவை கற்களை கொண்டு தான் மனுதாரர் , எதிர்மனுதாரர் பூமி எல்லைகள் அளவீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். மனுதாரரின் பூமிக்கு வடபுறமாக நெடுஞ்சாலைத்துறையால் எவ்வளவு நிலம் எடுக்கப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**<u>2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

குறுக்குவிசாரணைக்கு வேண்டி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham

District Munsif, Sulur